RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22247

# மருத நில மக்களின் இறைசார்ந்த நம்பிக்கைகள்

பொ. அருள் [அ, *]

[அ] தமிழ் உயராய்வுத்துறை விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) திருச்செங்கோடு-637205, இந்தியா.

# Religious beliefs of the people of Marudham land

**P. Arul** [a, *]

[a], Department of Tamil, Vivekanandha college of Arts and Sciences for women(Autonomus) Tiruchengode, India

* Corresponding Author: aruledu083@gmail.com

Received: 10-02-2022
Revised: 03-04-2022
Accepted: 18-04-2022
Published: 30-04-2022

**ABSTRACT**

Beliefs often appear based on human fear When not realizing the enigmatic messages of nature and unable to explain the causes of suffering in human life, the human mind creates and teaches some reasons. They take shape as faith. Belief is born out of the will of the human mind. This article explains the concept that the things created by nature and the actions of man are related and that even though Indran is the god of the Marutha land, the people have worshiped all the land crossings. marutham It is worth noting that even though the small conflict have a theme, they have followed the principles of theology.

**Keywords:** Beliefs, Marutha land, Principles, Human values, Worship

## முன்னுரை

ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையினையும் பண்பாட்டு மரபினையும் அறிந்துகொள்ள உதவி செய்வது அச்சமுதாயத்தில் வாழும் மக்களின் நம்பிக்கையே ஆகும். நம்பிக்கை என்பது மக்கள் உருவாக்கியதாகும். பிற்காலத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுவதாகும். சமூகத் தேவைகளாலும் மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் தோன்றியவை ஆகும். மனிதனின் உணர்வுகளால் உருவாக்கப்பட்ட ஒன்று பிற்காலத்தில் சமூக உணர்வுகளாக மாற்றம் பெற்றது. இப்படி உருவாக்கப்பட்ட சடங்கியல் சார்ந்த நம்பிக்கைகள் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. இது மனிதன் தனக்காக ஏற்படுத்திக் கொண்ட ஒரு வழக்கமாகும்.

“நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காட்சி தருகின்றன“(ப.த.வா.வ.)இயற்கையின் புதிரான செய்திகளை உணராதபோதும், மனித வாழ்வில் நிகழும் துன்பங்களுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கின்றது. அவை நம்பிக்கையாக வடிவம் பெறுகின்றன. மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகின்றது. இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தினையும் மருத நிலத்திற்குரிய கடவுள் இந்திரன்என்றாலும் அம்மக்கள் அனைத்து நில கடவுள்களையும் வழிபட்டுள்ளனர் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

## வாழ்க்கைக்கு உதவும் கடவுளர்

கணவனும் மனைவியும் இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு வாழ்க்கை வாழ்ந்தாலும் உடன் இருந்து வாழும் வாழ்க்கைக்குத் தெய்வம் உதவும் என்னும் இறை சார்ந்த வாழ்வியல் நம்பிக்கையை மருதக்கலிப் பாடல் வெளிப்படுத்துகிறது.

"உடனுறை வாழ்க்கைக்கு உதவியுறையும்

கடவுளர்"(மருதக்கலி 93 5-7)

## முருகன் சூரபதுமனை வதம் செய்தல்

கெடாத விரதத்தாலே, இருவகையான அழகுக்கும் ஏற்றவாறு விளங்கிய சூரபதுமனைக் கொன்ற முருகனை புகழ்ந்துபாடி, நிறையாத காம வேட்கையினால் திருப்பரங்குன்றத்தில் உன்னோடு மழைக்காலத்தில் பல நாளும் தங்கி இருந்த கடவுளைக் கண்டாயோ? என மருதத் திணைத் தலைவி தனது தலைவனிடம் கேட்கிறாள். இதனை,

"பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ?

ஈர் அணிக்கு ஏற்ற ஒடியாப் படிவத்துச்

சூர்கொன்ற செவ்வேலாற்பாடி, பல நாளும்,

ஆராக் கனை காமம் குன்றத்து நின்னொடு

மாரி இறுத்த கடவுளைக் கண்டாயோ"(மருதக்கலி 93: 23-27)

எனும் பாடலில் முருகனின் அருட்செயல்களுல் ஒன்று அரக்கன் சூரபதுமனைக் கொன்றது. இந்நிகழ்வினை நினைவு கூறும் பொருட்டு மக்கள் கார்த்திகை மாதத்தில் 'கந்தசஷ்டி' விரதம் இருந்து வருகின்றனர். இறை நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இந்தப் பாடல் அடி உள்ளது.

## கொற்றவை தெய்வம் குறித்த நம்பிக்கை

அகன்ற காட்டிடத்தில் இருக்கும் கொற்றவை பேய் குறித்து குறி சொல்லும் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் இருந்தது. இதனை மருதக்கலிப் பாடல்,

"பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு,

வருத்தல்"(மருதக்கலி 89: 8-9)

எனச் சுட்டிக்காட்டுகின்றது. தலைவன் தன் பரத்தமை ஒழுக்கத்தை வெளிக்காட்டாமல் மறைத்துக் கூறும் வஞ்சகச் சொல்லிற்கு அவன் மனைவி, அகன்ற காட்டிடத்தில் வாழும் கொற்றவைகுப் பேய் குறி சொல்லுகின்றது போல உன்னுடைய வஞ்சகச் சொல் இருக்கின்றது எனத் தலைவி உவமை கூறுகின்றாள். கொற்றவை குறித்த செய்தி தொல்காப்பியம் பாலைத்திணையில் உள்ளது. சங்க இலக்கியங்களிலும் பாலைத் திணையில் அமைந்துள்ள பாடலில் இதன் வழக்காறு மிகுதியாக உள்ளது. பாலை நிலக் கடவுளாக கொற்றவை தெய்வத்தைக் காண முடிகின்றது. நக்கீரன் எழுதிய திருமுருகாற்றுப்படையில் முருகனை 'கொற்றவை சிறுவ' எனக் குறிப்பிட்டுள்ளது.

## பாணனின் குதிரை

மருதத்திணைப் பாடல்களில் பாணனின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவனே தலைவனைப் பரத்தையிடம் ஆற்றுப்படுத்தி, தலைவியின் சண்டைக்கு முதன்மைக் காரணமாக அமைகிறான். மருதக்கலிப் பாடலொன்றில் காமக் கிழத்தியின் கூற்று பாராட்டத்தக்க வகையில் அமைந்திருக்கின்றது. பாகனும் பாணனும் தலைவனின் தோழனுமே தலைவனைப் பரத்தையிடம்

கொண்டு சேர்க்கும் பணியினைச் செய்கின்றனர். காமக் கிழத்தியை சாந்தப்படுத்தி சத்தியம் செய்யவும் வைக்கின்றனர். தேரோட்டும் பாகனுக்குத் தேரும், தலைவனின் தோழனாகிய பாணனுக்கு யாழும் முக்கியமான ஒன்றாகும். அவர்கள் இருவரும் தாம் தெய்வமாகப் போற்றும் தேரையும் யாழையும் முன்னிறுத்தி இனிமேல் தலைவனைப் பரத்தையிற் பிரிவில் சேர்ப்பதில்லை என உறுதி ஏற்கின்றனர். எனினும் தலைவன் பரத்தையின் காரணமாகப் பிரிந்து செல்கின்றான். இதனால் காமக் கிழத்தி ஊடல் கொள்கின்றாள். உறுதியேற்று தெய்வத்தையோ தெய்வத்திற்கு ஒப்பான பொருளையோ முன்னிறுத்தியே உறுதி ஏற்பர். செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதுவது மரபாதலின் அத்தொழிலுக்குரிய கருவிகளே, அத்தொழில் செய்வார்க்குத் தெய்வமாகும். மருதக்கலிப் பாடலில் தலைவன் தொழில் சார்ந்த கருவிகளை முன்னிறுத்தி உறுதி ஏற்கிறான். இதனை,

"ஒரு நீ பிறர்இல்லை, அவன்பெண்டிர் என உரைத்து,
தேரொடும் தேற்றிய பாகன் வந்தீபான் கொல்
ஓர் இல் தான்கொணர்ந்து உய்த்தார் புலவியுள் பொறித்தபுண்
பாரித்துப் புணர்ந்து நின் பரத்தமை காணிப?
எடுத்து அவன் புகுவழி மறையேன் என்று யாழொடும்
எடுத்துச் சூற்பல உற்ற பாணன் வந்தீபான் கொல்
அடுத்துத் தன்பொய் உண்பார்ப் புணர்ந்த நின் எருத்தின் கண்
எடுத்துக் கொள்வது போலும் தொடி வடுக் காணிப"(மருதக்கலி71; 9-16)

என்னும் பாடலின் வழி அறிய முடிகின்றது.

## பெண்கள் தோள்களை அழகுபடுத்துதல்

மருத நிலத்தில் வாழுகின்ற பரத்தை மகளிர் அனைவரும் தங்களது தோள்களில் குங்குமக் குழம்பினால் கரும்பு வல்லியும் மலரும் வரைந்து அழகு செய்யும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. தலைவன் தழுவிய அத்தகைய பரத்தையரின் தோலும், அவன் மயங்கிக் கிடந்த பாயலாகிய கூந்தலும், அவன் பரத்தையருக்குத் தந்த குறுந்தொடியும் குறித்து,

"உழுந்திடைக் கழுந்தின் கரும்புடைப் பணைத்தோள்,
நெடும்பல் கூந்தல், குறுந்தொடி மகளிர்
நலன் உண்டு துறத்தி ஆயின்
மிக நன்று அம்ம - மகிழ்ந! நின சூளே"(குறுந்தொகை 384)

என்னும் குறுந்தொகைப் பாடல் வழி அறிய முடிகின்றது.

கற்பம் கொண்ட மகளிர் புளிப்புச் சுவையை விரும்புதல்

நீர் நிறைந்த பகுதிகளில் வாழும் சம்பங்கோழியின் நீல நிறம் கொண்ட சேவலைக் கூரிய நகங்களையுடைய அதன் இனமான பெட்டை தன் வயா நோய் தீர்தல் பொருட்டு எப்பொழுதும் அதனையே நினைத்திருக்கும். அதனைப் போலவே மனைவியினுடைய வேட்கையால் உண்டாகும் நோய்க்கு அவளது கணவனது அகன்ற மார்பு புளிப்பை உடைய புளிங்காய்ச் சுவையாகத் தோன்றுகிறது. புளிங்காயைச் சுவைக்க விரும்புகிறவர்கள் அதனை நினைத்தாலே அவர்களது வாயில் எச்சில் நீர் ஊரும். அது போல மனைவி தனது கணவனை நினைத்த அளவில் அவளுக்கு காமச்சுவை தோன்றுகின்றது.

"நீருறை கோழி நீலச் சேவல்

கூர்உகிர்ப் பேடை வயாஅம் ஊர!(ஐங்குறுநூறு 51)

புளிங்காய் வேட்கைத்து அன்று, நின்

மலர்ந்த மார்பு இவள் வயாஅ நோய்க்கே"

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலால் அறிய முடிகின்றது. 'வயாநோய்' என்பது வேட்கையோடு தொடர்புடையது. இந்நோய் கற்பம் அடைந்த அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. கற்பமடைந்த பெண்கள் புளிப்புச்சுவையைப் பெரிதும் விரும்புவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. இதனை வயவுநோய் என்றும் குறிப்பிடுவர். கற்பம் அடைந்த பெண்கள் மண்ணின் வாசனையையும் விரும்பி யாரும் அறியாத நேரம் பார்த்து வாயிலிட்டுச் சுவைப்பர் இதனை

"பிறர் மண்ணுண்ணும் செம்மல்! நின்னாட்டு

வயவுறுமகளிர் வேட்டுணின் அல்லது,

பகைவர் உண்ணா அரு மண்ணினையே" (புறம் 20: 13-15)

என்னும் புறநானூற்றுப் பாடல் விளக்கம் தருகின்றது.

## நீர்த்துறையி இருக்கும் தெய்வங்கள்

நீர்த்துறையில் தெய்வங்கள் தங்கும் என்பது பண்டையோர் நம்பிக்கையாகும். சங்க இலக்கியமும் இதனைக் குறிப்பிட்டுள்ளது. இதனை,

"துறை எவன் அணங்கும், யாம் உற்ற நோயே?

இறையழிப் புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கி" (ஐங்குறுநூறு 53:1-2)

என ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. நீர்த்துறையில் இருக்கும் தெய்வங்கள் நீராடும் இளம் பெண்களை அச்சுருத்தும் என்பது அக்கால மக்களின் நம்பிக்கையாகும்.

"உண்டுறை அணங்கு இவள் உறை நோய்யாயின்

தண்சேறு களவன் வரிக்கும் ஊரற்கு" (ஐங்குறுநூறு 28:1-2)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலடிகளும் இந்த நம்பிக்கையை வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. நீர் நிலைகள் என்பது ஊரில் உள்ள மக்கள் குடிநீர் எடுத்துப் பயன்படுத்துவதற்கு இடமாக அமைந்த படித்துறையாகும். இத்துறையில் மக்கள் அனைவரையும் பயம் கொள்ளச் செய்யும் அணங்கு இருப்பதாக அக்கால மக்கள் நம்பினர். குடிநீர் குளங்களில் மக்கள் அசுத்தம் செய்யாமல் இருப்பதற்காக இவ்வாறு தெய்வங்கள் அமைத்து பயம் கொள்ளச் செய்தனர். இன்றும் இந்நிலை தொடர்வதனை அறிய முடிகின்றது.

## சூளுரை ஏற்றல்

சங்க காலத்தில் மருத நிலத்தில் வாழ்ந்த மக்களுடைய சூளுரைகள் சார்ந்த வழக்காறுகளும் மருதப்பாடல்களில் பரவலாக இடம் பெற்றிருக்கின்றன.

முருகன் மீது சத்தியம் செய்தல்

முருகன் என்னும் கடவுளர் வழிபாடு சங்க இலக்கியத்திலேயே உள்ளது என்பதனை அறிய சில சான்றுகள் உள்ளன. பரணர் பாடிய அகநானூற்று மருதத்திணைப் பாடலில் தலைவியிற் பிரிந்து பரத்தையிடம் சென்று, மீண்டும் பரத்தையிற் பிரிந்து தலைவியிடம் வந்து சேர்ந்த தலைவனுக்கு அவன் மனைவி கூறுவதாக அமைந்த துறைப் பாடலில்,

"கழனி உழவர் கலிசிறந்து எடுத்த

கறங்குஇசை வெரீஇப் பறந்த தோகை

அணங்குடை வரைப்பகம் பொலியவந்து இறுக்கும்

திருமணி விளக்கின் அலைவாய்ச்

செருமி சேஎயொடு உற்ற சூளே" (அகம் 266 17-21)

என்னும் பாடலடிகளில் தலைவன் திருச்செந்தூர் முருகன் மீது சத்தியம் செய்தது குறிக்கப்பெறுகின்றது. தலைவனின் பரத்தமைத் தொடர்பு அலராவது அவனது தலைவிக்குத் துன்பம் விளைவிக்கவில்லை. உழவுத் தொழில் செய்யும் உழவர்கள் செருக்குடன் எழுப்பிய ஆராவாரத்திற்கு அஞ்சி அங்கிருந்து பறந்து சென்ற மயிலானது, தெய்வத்தையுடைய குன்று பொலிவினைப் பெறுமாறு வந்து தங்கும் சிறப்பினையுடைய அழகிய மணி விளக்குகள் ஒளி செய்யும் பெரிய அலைகள் வீசக்கூடிய திருச்செந்தூர் வாயிலில் வீற்றிருக்கும் வெல்லும் போரை வல்ல முருகனைச் சுட்டி தலைவன் அன்று களவுக் காலத்தில் செய்து கொடுத்த சூள் மொழிதான் தன்னை இன்னும் துன்புறுத்துவதாக மனைவி தலைவனிடம் கூறுகின்றாள். முருகன் மீது சத்தியம் செய்யும் வழக்கம் சங்க இலக்கியத்திலேயே இருந்தது தெரிய வருகின்றது. இன்றும் தங்களுக்கு உரிய கடவுள் மீது சத்தியம் செய்யும் வழக்கம் இருக்கின்றது.

## தெய்வத்தின் முன் சத்தியம் செய்தல்

பரணர் பாடிய அகநானூற்றின் மருதத்திணைப் பாடலில் காதற் பரத்தை கூற்றாக அமைந்திருக்கின்றது. அப்பாடலில் தலைவன் வெல்லுதற்குரிய தெய்வத்தின் முன்னின்று சத்தியம் செய்து காமக்கிழத்தியைத் தெளிவித்தான். அவளது முன் கையைப் பற்றி இனி உன்னை விட்டுப் பிரிய மாட்டேன் என்று சத்தியம் செய்தாள். ஆனால் அவன் கூறிய படி நடவாமல் காமக்கிழத்தியைப் பிரிந்து அயலில் உள்ள பரத்தையிடம் உறவு கொள்கிறான். இதனால் காமக் கிழத்தி அவனிடன் சண்டை இடுகின்றாள். இதனை,

"தெறலருங் கடவுள் முன்னர்த் தேற்றி,

மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து

ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்ப, நின்

மார்பு தருகல்லாய் பிறன் ஆயினையே"

என்னும் பாடல் உணர்த்துகிறது. (அகம் 396:7-10)

## கற்புக் காலத்தில் ஏற்கும் உறுதிமொழி

தலைவன் பரத்தையர் சேரியிலிருந்து வந்ததால் கோபமாக இருக்கும் அவன் மனைவி அவனை ஏற்க மறுக்கின்றாள். மேலும் தலைவன் பொய்யான உறுதியினைக் கூறுவதில் வல்லவன். அவனுடைய பொய்யான உறுதி மொழிக்கு மனைவி பயப்படுகின்றாள். கற்புக் காலத்தில் ஏற்கும் உறுதி அக்குடும்பத்தில் தொடர்புடைய அனைவரையும் பாதிக்கும். தலைவன் மேலும் பொய்யாக உறுதி கூறாமல் இருக்க வேண்டுமெனில் ஊடல் தீர்தலே முறை என்றும் அவள் எண்ணுகின்றாள். இதனை,

"தேர் மயங்கி வந்த தெரிகோதை அம்நல்லார்

தார்மயங்கி வந்த தவறு அஞ்சி, போர்மயங்கி,

நீ உறும் பொய்ச்சூள் அணங்காகின், மற்று இனி

யார்மேல் விளியுமோ? கூறு" (மருதக்கலி 88: 18-21)

என்னும் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

மருதத்திணைப் பாடல்களில் கணவனும் மனைவியும் இணைந்து வாழும் வாழ்க்கைக்குத் தெய்வம் உதவும். மருத நில மக்கள் சூரபதுமனைக் கொன்ற முருகக் கடவுளுக்காக கார்த்திகை மாதம் மேற்கொள்ளும் கந்த சஷ்டி நோன்பு பற்றிய இறைநம்பிக்கை, பெரிய கட்டிடத்தில் தங்கி இருக்கும் கொற்றவைக்குப் பேய் நொடி சொல்லுதல் முதலான நம்பிக்கைகள் காணப்படுகின்றன. மருதநிலப் பரத்தையர் தம் தோள்களில் குங்குமக் குழம்பினால் கரும்பும் வல்லியும் மலரும் வரைந்து ஒப்பனை செய்யும் வழக்கம், கண்ணுக்கு மையிடும் வழக்கம், நீர் நிலைகளில் தெய்வம் இருக்கும் என்ற நம்பிக்கை, பலிகளை ஏற்றுக்கொள்ளும் அச்சம் தரும் தெய்வம் நடமாடுவதாக மக்கள் கொள்ளும் நம்பிக்கை முதலானவை இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தலைவன், தலைவியிடம் திருச்செந்தூர் முருகன் மீது சத்தியம் செய்து தன் பரத்தமைத் தொடர்பை மறுப்பது, தலைவன் காமக்கிழத்தியைச் சமாதானப்படுத்த தெய்வத்தின் முன்பு சத்தியம் செய்தல், பாணன் தன் தொழிற் கருவிகளை முன் வைத்து உறுதி ஏற்றல், கற்புக் காலத்தில் தலைவனது பொய்யான சத்தியத்திற்கு தலைவி பயப்படுதல் மற்றும் போன்றவை மருதத்திணைப் பாடல்களில் பயின்று வந்திருப்பதனால் மருதநிலமக்கள் ஊடலை உரிப்பொருளாக்க் கொண்டிருந்தாலும் அவர்கள் இறைவாழ் நெறிமுறைகளை கடைபிடித்தள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## References

Kailasapathi, K. (1992) Pandai Tamilar Valvum valipadum, Kumaran Pathipagam, Chennai, India

Kalyanasundaranar, V. (1987) Murugan allathu alagu, Sadhu Achukudam, Chennai, India

Kathir mahadeva, (2008) Sanga Ilakiya Thonmam, Sellapa Pathipagam, Madurai, India

Pillai, K.K. (2007) Tamilaga Varalarum Pandaum, International institute of tamil studies, Chennai, India

Sankarabani, R. (2003) Sanga Tamilvalam, Meyyapan Pathipagam, Chidambaram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License